சுருக்கம்

பணியமைப்பு – பொது சுகாதாரம் – பல்நோக்கு சுகாதார பணியாளர் (ஆண்) பணியிடம் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நிரப்பிட பொருத்தமான மாற்றுத்திறனாளிகள் பணியமர்த்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு (எல்1)த் துறை

அரசாணை (நிலை) எண்.42 நாள் 29.01.2022

திருவள்ளுவர் ஆண்டு – 2053
பிலவ, தை – 16

02 FEB 2022
சென்னை-600 006

படிக்க:

1. மருத்துவ பணியாளர் தேர்வு வாரியத்தின் கடித எண்.828/ மபதே/இ5/2019, நாள் 20.11.2019, 01.07.2020 மற்றும் 22.03.2021.
2. மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.3908/பணியமர்த்தல்/2021, நாள் 16.08.2021.
3. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் அவர்களின் கடித எண்.69080/பநோ1/எஸ்1/2016, நாள் 01.10.2021.

********

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவப்பணியாளர் தேர்வு வாரியம் மாற்றுத் திறனாளிகளுக்கான 4% இட ஒதுக்கீட்டிலிருந்து விலக்களிக்குமாறும், பல்நோக்கு சுகாதார பணியாளர் (ஆண்) / சுகாதார ஆய்வாளர் நிலை–2 பணியிடம் நிரப்புவது தொடர்பாக அனுப்பப்பட்ட அறிவிக்கைக்கு ஒப்புதல் வழங்குமாறும் கோரியது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அரசாணை (நிலை) எண்.51, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந3.2) துறை, நாள் 26.12.2017 அனைத்துத் துறைகளிலும் உள்ள 'C' மற்றும் 'D' தொகுதியில் உள்ள அனைத்து பதவிகளும் மாற்றுத்திறனாளிகளுக்கு நேரடி நியமனம் மூலம் நியமிக்க ஏற்ற பதவிகள் என மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016, சட்ட பிரிவு 33(1)–ன்படி கண்டறியப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது மற்றும் அரசாணை (நிலை) எண்.294, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (என்2) துறை, நாள்.13.10.2010–ல் பல்நோக்கு சுகாதார பணியாளர் நிலை–2 (ஆண்) (Multipurpose Health Worker–Male) பதவிக்கு பல்வேறு பொறுப்புகள் குறித்து ஆணையிடப்பட்டுள்ளது எனவும் அவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளால் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே, குள்ளத்தன்மை, ஒரு கால் பாதிக்கப்பட்டவர்கள், ஒரு கை பாதிக்கப்பட்டவர்கள், அமிலவீச்சு தன்மையால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற

/ த.பி.பா /

MPI

மாற்றுத்திறனாளிகளால் இப்பணிகளை மேற்கொள்ள இயலும் என்ற நிலையில் பல்நோக்கு சுகாதார பணியாளர் நிலை–2 (ஆண்) (Multipurpose Health Worker – Male) என்ற பதவிக்கு மேற்காணும் மாற்றுத்திறனாளிகளை நியமனம் செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்குநர் பல்நோக்கு சுகாதார பணியாளர் (ஆண்) (Multipurpose Health Worker – Male) என்ற பதவிக்கு குள்ளத்தன்மை, ஒரு கால் பாதிக்கப்பட்டவர்கள், ஒரு கை பாதிக்கப்பட்டவர்கள், அமில வீச்சுத்தன்மையால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற மாற்றுத்திறனாளிகளை நியமனம் செய்யலாம் என்று மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரின் பரிந்துரைக்கு தனது இசைவினை அளித்துள்ளார்.

4. மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் பல்நோக்கு சுகாதார பணியாளர் (ஆண்) (சுகாதார ஆய்வாளர் நிலை–2) பதவிக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான 4% இட ஒதுக்கீட்டில் எவ்வகையான மாற்றுத்திறனாளிகளை பணியமர்த்தலாம் என அரசு கவனமுடன் பரிசீலித்து ஒரு கால் பாதிக்கப்பட்டவர்கள், ஒரு கை பாதிக்கப்பட்டவர்கள், அமிலவீச்சு தன்மையால் பாதிக்கப்பட்டவர்கள், குள்ளத்தன்மை (LD, OA, OL), AC, DF) ஆகிய வகையிலான மாற்றுத்திறனாளிகளை பணியமர்த்தலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

5. இவ்வாணை மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அ.சா.எண்.14967/ மாதிந–2/2021, நாள் 05.01.2022ல் அளித்த ஒப்புதலின்படி வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ. ராதாகிருஷ்ணன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து இயக்குநர், சென்னை–600 006.
தலைவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை–600 006.
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–600 001.
(அரசிதழில் வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையுடன்)

**நகல்**

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சென்னை–600 009.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி / தகவுப் பிரிவு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.